

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 23.03.2026


# அடிமைக் கூட்டமே அ.தி.மு.க.!

அடிமைக் கூட்டமே அ.தி.மு.க. என்பதை ஒவ்வொரு நாளும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற சொல்லை உச்சரிப்பதற்கான எந்தத் தகுதியும் அவருக்கு இல்லை.

**மதுரையில் நடைபெற்ற கூட்டத்தின் முகப்பில் தந்தை பெரியார் படத்தை வைக்கக்கூடாது என்று பா.ஜ.க. சொன்னதும், அதை எடுக்கத் துணிந்தவர்தான் பழனிசாமி. மதுரையில் நடைபெற்ற பா.ஜ.க. ஆதரவுக் கூட்டத்தில் பெரியாரும், அண்ணாவும் கொச்சைப்படுத்தப்படும் காணொலி வெளியிடப்பட்டது. அப்போது அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் மூன்று பேர் சொரணையே இல்லாமல் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். 'திராவிடம்' என்ற சொல் அந்தக் கூட்டத்தில் அவமானப்படுத்தப்பட்டது. அ.தி.மு.க. முன்னணியினர் அதனைக் கூட தடுக்கவில்லை. 'திராவிடம் என்றால் எனக்குத் தெரியாது, புராணங்களை நான் படித்தது இல்லை' என்று சொன்னவர்தான் பழனிசாமி. அதனால்தான் சொல்கிறோம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற சொல்லை உச்சரிப்பதற்கான எந்தத் தகுதியும் அவருக்கு இல்லை என்று!**

தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாக மாறியவர்தான் பழனிசாமி. அவரது பச்சைத் துரோகத்துக்கு பெரிய பட்டியலே இருக்கிறது.

சிறுபான்மை சமூகத்துக்கும் இலங்கைத் தமிழர்க்கும் துரோகம் இழைக்கும்வகையில்குடியுரிமைத்திருத்தச்சட்டத்தைமாநிலங்களவையில் ஆதரித்த கட்சிதான் அ.தி.மு.க. மாநிலங்களவையில் குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக 10 அ.தி.மு.க. எம்.பி.க்கள் அன்று வாக்களித்தார்கள். இவர்களோடு 'பாட்டாளி' அன்புமணி ராமதாசும் வாக்களித்து துரோகம் இழைத்தார். இவர்களால்தான் சிறுபான்மையினருக்கு எதிரான குடியுரிமைச் சட்டம் மாநிலங்களவையில் நிறைவேறியது. அதாவது ஆதரித்தவர்கள் 125 பேர். எதிர்த்து வாக்களித்தவர்கள் 105 பேர். அன்புமணி மற்றும் அந்த 10 அ.தி.மு.க. எம்.பி.க்களின் ஓட்டுதான் குடியுரிமை சட்டம் நிறைவேறக் காரணம்.

அந்த 11 பேரும் எதிர்த்து வாக்களித்திருந்தால் எதிர்த்தவர்கள் 116 பேர் என்றும் ஆதரித்தவர்கள் 114 பேர் என்றும் வந்திருக்கும். குடியுரிமைச் சட்டம் தோற்கடிக்கப் பட்டிருக்கும். 116க்கு 114 என்ற கணக்கில் CAA சட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும்.

**"குடியுரிமைச் சட்டத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லையே? எந்த முஸ்லீம் பாதிக்கப்பட்டார்? காட்டுங்கள்?" என்று கேட்டாரே பழனிசாமி. தமிழ்நாடு சட்டமன்றத்தில் 2021 பிப்ரவரி 20 ஆம் தேதி, குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக பெரிய சட்ட மேதையைப் போல விளக்கம் அளித்தவர்தான் இந்த பழனிசாமி.**

2021 செப்டம்பர் 8 அன்று, **'நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கேள்விக்குறியாக்கும் ஒன்றிய அரசின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்'** என்று சட்டமன்றத்தில் தனித் தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்தார்கள். இந்த தனித் தீர்மானத்தை சட்டமன்றத்துக்குள் இருந்து அ.தி.மு.க. ஆதரித்திருக்க வேண்டும். அல்லது தீர்மானத்தை எதிர்த்திருக்க வேண்டும். இரண்டையும் செய்யவில்லை. வேறு ஒரு காரணத்தைச் சொல்லி முன்னதாகவே வெளிநடப்பு நாடகத்தை நடத்தி வெளியேறி விட்டது பழனிசாமியின் கட்சி.

**மூன்று வேளாண் சட்டங்களை பா.ஜ.க. கொண்டு வந்தபோது ஆதரித்தார் இந்த பழனிசாமி. பா.ஜ.க. கூட்டணியில் அமைச்சரவையில் இடம்பெற்ற அகாலி தளம் கட்சியின் அமைச்சரே பதவி விலகுகிறார். ஆனால் பழனிசாமி ஆதரித்தார். மூன்று வேளாண் சட்டத்துக்கு எதிராக போராடும் எட்டு மாநில விவசாயிகளை, 'அவர்கள் விவசாயிகள் அல்ல, புரோக்கர்கள்' என்று சொன்னவர் இவர்தான்.**

'நீட் தேர்வு வைத்தால் எழுதித்தான் ஆக வேண்டும். அதில் எந்த சந்தேகமும் இல்லை' என்று சொன்னவர்தான் பழனிசாமி.

இத்தகைய பழனிசாமிக்கு பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்தால் ஏதும் தேறாது என்று தெரியும். அதனால் முதலமைச்சர் பதவியில் இருக்கும் வரை பா.ஜ.க.வை ஆதரித்து விட்டு அதனை கழற்றிவிடப் பார்த்தார். பா.ஜ.க., ரெய்டு அஸ்திரத்தை எடுத்தது.

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ரெய்டு அஸ்திரத்தை பா.ஜ.க. எடுத்தது. பழனிசாமியின் உறவினர்களுக்குச் சொந்தமான 26 இடங்களில் ரெய்டு நடந்தது. 'எடப்பாடிக்கு செக் - உறவினர் வீட்டில் தொடரும் ஐ.டி. ரெய்டு', 'எடப்பாடி பழனிசாமியின் உறவினர் வீட்டில் ஐந்தாவது நாளாக வருமான வரித்துறை ரெய்டு', 'எடப்பாடி உறவினர் வீட்டில் இறங்கிய ஐடி அதிகாரிகள்', 'எடப்பாடி உறவினர் வீட்டில் விடிய விடிய ரெய்டு', 'கூட்டணிக்கு குறிவைக்கப்படுகிறாரா எடப்பாடி?', 'வசமாக சிக்கிய எடப்பாடி பழனிசாமியின் உறவினர்', 'எடப்பாடி பழனிசாமியின் உறவினர் வீட்டில் சிக்கியது என்ன?', 'ரூ.750 கோடி வரி ஏய்ப்பு செய்த எடப்பாடியின் உறவினர்', 'உறவினரின் வரி ஏய்ப்பு - எடப்பாடிக்கு சிக்கல்', என்று ஊடகங்கள் அனைத்தும் செய்தி வெளியிட்டன. பா.ஜ.க.வுடன் முழு சரணாகதி அடைந்துவிட்டார் பழனிசாமி.

**இவர், 'அ.தி.மு.க. கூட்டணி' என்று சொல்வார். ஆனால் பிரதமரும், உள்துறை அமைச்சரும், 'தேசிய ஜனநாயகக் கூட்டணி' என்பார்கள். 'நான்தான் முதலமைச்சர்' என்று பழனிசாமி சொல்லிக் கொள்கிறாரே தவிர, இவர் பெயரைச் சொல்ல பிரதமர் தயாராக இல்லை. இத்தகைய சூழலில் அ.தி.மு.க. அலுவலகத்துக்கு பா.ஜ.க.வை வர வைத்து பழனிசாமியால் பேச்சுவார்த்தை நடத்த முடிந்ததா? இல்லை. இவர்தான் வாரம் தோறும் டெல்லிக்குப் போய் அமித்ஷா வீட்டில் காத்துக் கிடக்கிறார். பா.ஜ.க.விடம் தனக்கு இடங்களைப் பிரித்துக் கேட்பது போல இருக்கிறது இவர் செய்கை.**

எந்தத் தகுதியும் இல்லாதவர் பழனிசாமி என்பது தினந்தோறும் வெளிச்சத்துக்கு வருகிறது. கூவத்தூரில் சசிகலா காலில் விழுந்ததால் மட்டுமே முதலமைச்சர் ஆனவர் அவர். அவர் தலைமைக்கு கட்சி வந்த பிறகு கட்சியின் செல்வாக்கை தரைமட்டத்துக்கு தாழ்த்தினார். தமிழ்நாட்டை அனைத்துத் துறையிலும் தலைதாழ வைத்தார். இப்போது அ.தி.மு.க. என்ற கட்சியையே பா.ஜ.க.விடம் அடமானம் வைத்துவிட்டார். இந்தத் தேர்தலில் மட்டுமல்ல, எந்தத் தேர்தலிலும் அவரால் அதனை மீட்க முடியாது.

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.3.2026) அவரது இல்லத்தில், கவிஞர் இலக்கியா நடராஜன் அவர்கள் தொகுத்த "ப. சிதம்பரம் 100 – பல்துறைச் சான்றோர்களின் படைப்புகள்" நூலினை வெளியிட, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் பெற்றுக் கொண்டார். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கார்த்தி சிதம்பரம் ஆகியோர் உடனிருந்தனர்.

## இன்றைய சூழ்நிலையில்

# தி.மு.க.வை எதிர்க்க வலிமையான போட்டியாளர்கள் யாரும் இல்லை!

## காளையார்கோவிலில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேட்டி!

சிவகங்கை, மார்ச் 23-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் தமிழ் நாடு தலை குனியாது என்ற தலைப்பில் பரப்புரை நிகழ்ச்சியில் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். அந்த கூட்டத்திற்கு பின் காளையார் கோவிலில் செய்தியாளர்களிடம் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் கூறியதாவது:-



இன்றைய சூழ்நிலையில் தி.மு.க.வை எதிர்க்க தகுதியான வலிமையான வேட்பாளர்கள் யாரும் தமிழகத்தில் இல்லை .கடந்த ஐந்து ஆண்டுகளாக முதல்வர் மு. க ஸ்டாலின் சிறப்பாக மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி அதை செயல்படுத்தி உள்ளார். இந்த திட்டங்களில் பயன் நேரடியாக மக்களிடம் சென்று உள்ளது. இத்திட்டத்தின் மூலம் மீண்டும் மு .க .ஸ்டாலின் இரண்டாவது முறையாக முதல்வராவது உறுதியாகிவிட்டது .

இன்றைய அரசியல் சூழலில் தி.மு.க.விற்கு எதிரான வலிமையான போட்டியாளர்கள் யாரும் இல்லை. பா.ஜ.க. பெயரளவில் தான் உள்ளது. புதிய கட்சி தொடங்கியுள்ள சசிகலா, பா.ம.க நிறுவனர் ராமதாஸ் உடன் கூட்டணி வைத்துள்ளார். அவர் அரசியலுக்கு புதியவர். ஜெயலலிதா உடன் பயணித்தவர். இந்த தேர்தலில் மக்கள் தரும் தீர்ப்பினை வைத்து அவருடைய அரசியல் எதிர்காலம் அமையும்.

எடப்பாடி ஒரு சுயநலவாதி. அரசியல்வாதி என்பவர் அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்பவராக திகழ வேண்டும். கட்சி தொண்டர்கள் நிர்வாகிகளை அரவணைத்துச் செல்வதாக இருக்க வேண்டும்.எடப்பாடியிடம் இது ஏதும் இல்லை. இவரால் அதி.மு.க. படுகுழிக்குச் சென்று விட்டது .தமிழகத்தில் அ.தி.மு.க தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தலைமை என்று கூறி வருகிறார்கள். ஆனால் எதற்கெடுத்தாலும் அவர்கள் டெல்லியில் சென்று பா.ஜ.க. தலைவர்களை சந்தித்து ஆலோசனை பெற்று வருகிறார்கள். அ.தி.மு.கவை எங்கு எடப்பாடி அடகு வைத்துள்ளார் என்பது கட்சி தொண்டர்களுக்கு நன்றாக தெரிகிறது .. இவர்களது செயல்பாட்டை மக்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் வரும் தேர்தலில் அ.தி.மு.கவிற்கு தகுந்த பாடத்தினை தருவார்கள்.

த.வெ.க.தலைவர் விஜய் தி.மு.க.வை அரசியல் எதிரி என்று கூறுகிறார். ஆனால் அதற்கான காரணத்தை அவர் கூற வேண்டும். அவர் அரசியலுக்கு புதியவர். அவர் கூறுவதை மக்கள் ஏற்றுக் கொள்வதாக தெரியவில்லை. நான் செல்லும் இடங்களில் தி.மு.க.வினருக்கு மக்கள் வாக்களிக்க தயாராகி விட்டார்கள் என்பது தெரிய வருகிறது.

இன்றைய நிலையில் மக்கள் ஏற்றுக்கொள்ளும் இயக்கமாக ஒரு தலைவராக மு.க. ஸ்டாலினும் தி.மு.க.வும் விளங்குவதால் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்வராவது உறுதி.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் கூறினார் .

பேட்டியின் போது மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஒன்றிய செயலாளர்கள் யோக.கிருஸ்ணகுமார்,வே.ஆரோக்கியசாமி, ஆர்.எம்.கென்னடி, ஆகியோர் உடன் இருந்தார்கள்.

## எரிவாயு பற்றாக்குறையைப் போக்க ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் ஒரு தெளிவான திட்டம் இல்லை!

# விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில் போலீசார் விரைந்து சென்று குற்றவாளியை கைது செய்துள்ளனர்!

## மாணவியின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறியபின் கனிமொழி கருணாநிதி எம்.பி, பேட்டி!

**தூத்துக்குடி, மார்ச். 23-**

**விளாத்திகுளம் அருகே படுகொலை செய்யப்பட்ட மாணவியின் குடும்பத்தினரை சந்தித்து திமுக துணைப் பொதுச் செயலாளரும் கழக நாடாளுமன்றத் தலைவருமான கனிமொழி கருணாநிதி ஆறுதல் தெரிவித்தார். மாணவிக்கு நீதி கிடைக்கும் வகையில் குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத்தரப்படும் என்றும் அவர் உறுதி கூறினார்.**



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வேடபட்டி கிராமத்தில், 12 ஆம் வகுப்பு மாணவி கொடூரமாக பாலியல் வன்முறை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் சாயல்குடியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்ற நபரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், மாணவியின் குடும்பத்தினரை திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

மாணவிக்கு நீதி கிடைக்கும் வகையில் குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத்தரப்படும் என்றும் அவர் உறுதி கூறினார்.

அமைச்சர் கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன் உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி கருணாநிதி, எம்.பி, காவல்துறையினர் விரைந்து செயல்பட்டு குற்றவாளியை கைது செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

பின்னர் தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி கருணாநிதி, எம்.பி., எரிவாயு பற்றாக்குறையை சமாளிக்க ஒன்றிய அரசிடம் ஒரு தெளிவான திட்டம் இல்லை என்றார். வளைகுடா போர் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சமாளிப்பதில் ஒன்றிய அரசு மெத்தனமாக செயல்படுவதாகவும் அவர் விமர்சித்தார். பா.ஜ.க.வின் B teamதான் அ.தி.மு.க. என தி.மு.க. தொடர்ந்து கூறி வருவதை டெல்லி பயணம் மூலம் பழனிசாமி நிரூபித்து விட்டதாகவும் கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்.



சிவகங்கை மாவட்டம், சிவகங்கை சட்டமன்றத் தொகுதி காளையார் கோவிலில் தமிழ்நாடு தலை குனியாது பரப்புரைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். இதில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.